1974 சனவரி 22]

கிராமங்கள் என்று இருக்கின்றன. இரண்டு யூனியன்களில் உள்ளதையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். இரண்டு பகுதிகளில் ஒரு பகுதிதான் வந்திருக்கிறது. இரண்டு பகுதிக் கணக்குகளையும் நான் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே இந்த இரண்டு பகுதிகளையும் இணைத்துப் பார்த்து சின்னக்கண்ணனூருக்கு தார் சாலை போட ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1,500 மக்கள் தொகை கொண்டவற்றிற்கு சாலை அமைப்பதுபற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி இப்போது சொல்வது சரியல்ல என்று கருதுகிறேன். ஏனெனில் மத்திய அரசின் உதவி ஒருசிலவற்றிற்குப் பெற வேண்டியிருப்பதால் அதைப்பற்றி விளக்கமாகச் சொல்வது அவ்வளவு சரியல்ல.

Supply of rice to other States

* 83 *Q*.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the representatives of the West Bengal Government had met the Hon. Chief Minister in July 1973 to seek rice supplies; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) மேற்கு வங்காள மாநிலத்தில் உணவுப் பற்றுக்குறை இருந்த காரணத்தால், அம்மாநில அரசின் உணவு அமைச்சர், 19—7—1973 அன்று மாண்புமிகு உணவு கூட்டுறவு அமைச்சர் அவர்களைச் சந்தித்து அம்மாநிலத்திற்கு அரிசி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அதன் பின்னர், துர்கா பூஜையின்போது அரிசி வழங்கக் கோரி மேற்கு வங்காள முதலமைச்சர் கேட்டுக் கொண்டார். அதையொட்டி இரு தரப்பு அடிப்படையில் 3,000 டன் அரிசியை மேற்கு வங்காளத்திற்கு வழங்குவதென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

திரு. ரா. ரா. முனுசாமி : 1973-74-ல் தமிழ்நாட்டில் அதிக உற்பத்தி இருந்தபோது பக்கத்து மாநிலங்களுக்கு அரிசி வழங்கப்பட்டதே, எந்தெந்த மாநிலங்களுக்கு எவ்வளவு எவ்வளவு அரிசி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மகாராஷ்ட்ரா விற்கு 10,000 டன், குஜராத்திற்கு 8,000 டன், கேரளாவிற்கு மத்தியத் தொகுப்பிலிருந்து 1 லட்சம் டன், தனியாக 7,300 டன். மைசூருக்கு 4,039 டன், மேற்கு வங்காளததிற்கு 780 டன் அனுப்பப் பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அண்மையில் மத்திய அரசு வழியாகத்தான் இந்த உணவுப் பொருள்களை மற்ற மாநிலங் களுக்குக் கொடுக்க வேண்டுமென்று தாக்கீது வந்ததாக அறிகி றேன். அப்படி ஏதாவது தாக்கீது வந்திருக்கிறதா ? அப்படி வந்திருந்தால் அந்தத் தாக்கீதை எதிர்த்து இந்த அரசு ஏதாவது முறையீடு செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அப்படி தாக்கீது வந்திருக்கிறது. அதுவும் கேரளா முதல் அமைச்சர் அவர்கள் கேட்டதற்காக அந்தத் தாக்கீது வந்திருக்கிறது. நாம் அதுபற்றி அவர்களுக்கு எழுதியிருக்கிறோம். அவர்களும் மத்திய அரசைக் கேட்டிருக்கிறார்கள். நாங்களும் கேட்டிருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பொதுவாக பற்றாக்குறை இருக்கிற மாநிலங்களுக்கு, அண்டை மாநிலங்களான மைசூர், கேரளா போன்ற மாநிலங்களுக்கு குறைந்த அளவிற்கு இவ்வள வாவது நாமே சப்ளை செய்கிறோம் என்ற அளவிற்கு மத்திய அரசுக்கு எழுதி அரசு உத்தரவு பெற்றுக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நாங்கள் ஓரள விற்கு உத்தரவு இல்லாமலேயே சாதாரணமாக மத்திய அரசின் உணவு அமைச்சரிடம் பேச்சு மூலம் கேட்டு கொடுத்துக் கொண்டு வந்தோம். முதலில் அனுமதித்தார்கள். திடீரென்று என்ன காரணமோ கேரளா முதல் அமைச்சர் அவர்கள் கேட்டதற்கு இப்படி பதில் அனுப்பியிருக்கிறார்கள். அதுபற்றிய செய்திகள் எல்லாம் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. கனம் உறுப்பினர் அவர்கள் அதைத் தெரிந்து கொண்டிருப்பார்கள்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : அண்டை மாநிலங் களுக்கு நாம் நேரடியாக அனுப்புவதால் ஒரு மாநிலத்துடன் சுமூகமான உறவை பெற்றுக் கொள்ளவும் மற்றப் பிரச்னைகளைத்

1974 சனவரி 22]

தீர்த்துக்கொள்ளவும் அது வாய்ப்பாக இருக்குமாதலால் இதை வற்புறுத்தி நாமே நேரடியாக உதவி செய்வதற்கு தக்க நடவடிக்கைகளை பல முனைகளில் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதற்கான நடவடிக்கைகள் பல முனைகளில் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : பற்றாக்குறை மாநிலங்களுக்கு நேரடியாக அரிசி அனுப்ப முடியாதது குறித்துச் சொல்லி நேரடியாக அனுப்ப ஒரு முடிவு ஏற்பட வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு முன்னால் தமிழ்நாட்டுக்குத் தேவையான கோதுமை குறித்து மத்திய அரசிடம் நம் அரசு கேட்டிருக்கிறதா ? கோதுமைப் பொருள்கள் இன்று எந்தப் பிரதேசத்திலும் கிடைக்காத ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே கோதுமை, கோதுமைப் பொருட்கள் மத்திய அரசின் மூலம் நமக்குக் கிடைப்பதற்கு மாநில அரசு ஏதாவது வழிவகை செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : இதற்குச் சம்பந்தப்படாத கேள்வியாக இருந்தாலும் 35,000 டன் கொடுத்து வந்தது இப்போது 10,000 டன்தான் இரண்டு மூன்று மாதங்களாக கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். மேலும் அதிகம் வேண்டுமென்று ஜனவரியில் பக்ரீத் பண்டிகைக்கும் பொங்கலுக்கும் தனியாக ஒரு ஆயிரம், இரண்டாயிரம் டன் கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். மத்திய அரசு கொடுக்கவில்லை. கோதுமை பற்றாக்குறை காரணமாக தமிழ்நாடு வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

*84 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரள மாநிலத்திற்கு ஆண்டுக்கு 15 ஆயிரம் டன் அரிசி தருவதென நமது அரசு வாக்குறுதி அளித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) சிறுவாணி திட்டப் பணியைத் தொடங்கி வைத்தபோது முதலமைச்சர் கேரளாவுக்கு ஒவ்வொர் ஆண்டும் 15,000 டன் அரிசி வழங்கப்படும் என்று அறிவித்தார். ஒரு மாநிலத்தில் உபரியாக